**மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III/ ஒரு வருட பயிலுநர் தரம் / இரண்டு வருட பயிலுநர் தரம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) – 2025**

மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III/ ஒரு வருட பயிலுநர் தரம் / இரண்டு வருட பயிலுநர் தரம் ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி **2026.01.09** ஆகும்.

1. **பொது தகைமைகள்** : -

1.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
1.2 சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
1.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதாவது 2008.01.09 திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக மற்றும் 1991.01.09 திகதிக்கு அல்லது அதற்கு பின்னரான திகதியை பிறந்த திகதியாக கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.)
1.4 இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் வசிப்பவருக்கும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.*
*அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தினுள் நிரந்தர வதிவுடைய மற்றும் மத்திய மாகாணத்தில் 03 வருடங்களுக்கு அதிகமான நிரந்தர வதிவினைக் கொண்ட துணையினைக் கொண்ட விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பு செய்ததன் பின்னர், இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வசிக்கும், தகைமையுடையை விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் மத்திய மாகாண சபையினுள் 05 வருடங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
1.5 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1.6 ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவராவார்
1.7 ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை, அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற்றகைமைகள்: -
*அனைத்து கல்வி மற்றும் தொழில் தகைமைகளை **2026.01.09** ஆம் திகதிக்குப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| பதவி | கல்வித் தகைமைகள் | | தொழில் (தொழிநுட்ப) தகைமைகள் |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | |
| 2.1. மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு | கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், உயர் கணிதம் ஆகிய மூன்று | 1. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.) |

| | | | |
|---|---|---|---|
| | ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து)<br><br>அல்லது<br><br>கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பொறியியல் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) | அல்லது<br>2. தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளிக்கும் அதிகார சபையினால் (NAITA) வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>3. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>4. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>5. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாம் பகுதியினை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>6. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>7. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிநுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | | *ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிட்டுள்ள மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்குப் பதிலாக பொது நிருவாக சுற்றறிக்கை 46/90 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளும் பொருந்தும் |
| 2.2. மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சியுடன்) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்), விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், உயர் கணிதம் ஆகிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து)<br><br>அல்லது<br><br>கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பொறியியல் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) | 1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில், பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) பெற்றிருத்தல். (உ+ம் : தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் சிவில்)<br>அல்லது<br>2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையில் கைத்தொழில் தொழிநுட்பத்திற்கான தேசிய சான்றிதழ் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் (NCIT) பெற்றிருத்தல்.<br>அல்லது<br>3. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழிநுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழிநுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |
| 2.1.3. மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்) பயிலுநர் தரம் (இரு வருட கால பயிற்சியுடன்) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்), விஞ்ஞானம், கணிதம் அத்துடன் வேறு ஏதேனும் ஒரு பாடத்திற்கும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். | கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞானப் பிரிவின் கீழ் இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல், உயர் கணிதம் ஆகிய மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து)<br><br>அல்லது<br><br>கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில், பொறியியல் தொழில்நுட்ப பிரிவின் கீழ் பொறியியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய இரண்டு பாடங்கள் உள்ளடங்களாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (சாதாரண பொதுப்பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்து) | பொருத்தமற்றது |

3. **சம்பள அளவுத்திட்டம்** :

3.1 மத்திய மாகாண தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III

- 2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன் MN 03-2025 சம்பளத் தொகுதிற்கமைய சம்பள அளவுத்திட்டம் ரூபா. 52,250 – 10X800 – 11X1190 – 10X1320 – 10X1350 – 100,040/- ஆகும்

- இச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் திகதி தொடக்கமாகும்.

- அத்துடன் நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய சம்பளம் செலுத்தப்படும்.

3.2 மத்திய மாகாண அரச சேவையில் தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம்

- பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன் அடிப்படையில்

| வருடம் | மாதாந்தக் கொடுப்பனவு | |
|---|---|---|
| | 2026.01.01 ஆம் திகதி முதல் (ரூபா.) | 2027.01.01 ஆம் திகதி முதல் (ரூபா.) |
| 1 வருடம் | 43,274.00 | 45,230.00 |
| 2 வருடங்கள் | 43,730.00 | 45,770.00 |

4. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்** :-

4.1 மத்திய மாகாண தொழிநுட்ப சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் இதற்கு பொருந்தும்

4.2 நிலவும் வெற்றிடங்களின் 70% ஆனவை திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4.3 மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள். பரீட்சையில் காட்டும் திறமையின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4.4 திறமை ஒழுங்கு வரிசையின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்று தகைமைப் பெற்று இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தில் நிலவுகின்றதெனில், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் இருந்து மேலதிகமாக தெரிவு செய்வது தொடர்பில் தீர்மானம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ள முடியும். இதன்போது அரச சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

4.5 தரம் III இற்கு நேரடியான ஆட்சேர்ப்பு மற்றும் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு ஆகிய இரண்டு முறைகளில் ஆட்சேர்ப்பு செய்கையில், தரம் III இற்கு முதலில் ஆர்சேர்ப்பு செய்யப்படும். தரம் III இற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையை விட குறைவாக இருப்பின், மிகுதியாக உள்ள வெற்றிடங்கள் பயிலுநர் தரத்திலுள்ள தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து முறையே ஒரு வருட பயிலுநர் தரம் மற்றும் இரண்டு வருட பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

5. **ஆட்சேர்ப்பு பரீட்சை** :-

5.1 பரீட்சை ஊடகம்:

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழிமூலத்திலே விடையளித்தல் வேண்டும். தனது விண்ணபப்பபடிவத்தில் தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திற்கு உரிய குறியீட்டினைக் குறிப்பிடல் வேண்டும். அத்துடன் பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

5.2 பரீட்சை நிலையம்: இப்பரீட்சை **கண்டியில் மாத்திரம்** நடாத்தப்படும்.

- பரீட்சை நிலையம் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைமூலம் அறியத் தரப்படும்.

5.3 அனுமதி அட்டை வழங்குதல்:

- இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும்.

- பரீட்சை அனுமதி வழங்கப்பட்டமை தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது.

- விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

- அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் காரியாலயத்தின் பரீட்சைப் பிரிவிடம் வினவுதல் வேண்டும். தொலைபேசி இல. 081 – 2213097.

5.4 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடல்:

இப்பரீட்சையின் பெறுபேறுகள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக வெளியிடப்படும்

5.5 பரீட்சை பாடவிதானம்

| தொடர் இல. | பதவி | பாடத்திட்டம் |
|---|---|---|
| 01 | மத்திய மாகாண அரச சேவையின் தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III/ பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சியுடன்) / பயிலுநர் (இரண்டு வருட கால பயிற்சியுடன்) | <u>முதலாவது வினாப்பத்திரம்</u><br>01. நுண்ணறிவுப் பரீட்சை:(சித்தியடைவதற்கான புள்ளிகள் 40%)<br><br>காலம்: 01 மணித்தியாலம். (மொத்தப் புள்ளிகள் 100)<br>இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். |

| | | |
|---|---|---|
| | | <u>இரண்டாவது வினாப்பத்திரம்</u><br><br>02. தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம்:<br>(சித்தியடைவதற்கான புள்ளிகள் 40 %)<br><br>காலம்: 03 மணித்தியாலங்கள். (மொத்தப் புள்ளிகள் 100)<br>- துறைசார் தொழிநுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும் அமைப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும்<br>- இங்கு சிவில் உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய அறிவினைப் பரீட்சிப்பதற்காக கட்டட நிர்மானம் மற்றும் பராமரிப்பு, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, நீர் வழங்கல் மற்றும் வடிகால் முறை சம்பந்தமான வினாக்களைக் கொண்டது |

6. **அபேட்சகரின் ஆளடையாளம்**

6.1 அனுமதி அட்டையின்றி எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

6.2 அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் ஏதும் பாவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்** :-

| தொடர் இல. | பதவி | சேவை நிபந்தனைகள் |
|---|---|---|
| **01** | மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III | I. இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்<br>II. இபந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படும். தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருட காலத்திற்குள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | III. அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்<br>IV. இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கக்கோரியோ மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. |
| **02** | மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) பயிலுநர் தரம்<br>- (ஒரு வருட கால பயிற்சியுடன்),<br>- (இரண்டு வருட கால பயிற்சியுடன்) | I. பயிலுநர் தரத்திற்கு உள்வாங்கப்படும் விண்ணப்பதாரர்கள், உரிய ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சி காலத்தினை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்திபெற்று பெறப்படும் சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.<br>II. பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைய தவறும் பயிலுநர்களின் பயிற்சிக் காலத்தை மேலும் 06 மாதத்திற்கு மிகையாகாத விதத்தில் நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதுடன், அத்தகைய நீடிக்கப்பட்ட காலத்தின் முடிவில், மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைய தவறும் பட்சத்தில், அப்பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும். |

8. **விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள்** : -

8.1 இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ-4 (A4) அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 04 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 05 முதல் 07 வரை இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 08 முதல் 12 வரை மூன்றாம் பக்கத்திலும், ஏனையவை நான்காம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிறாத, சரியாக பூர்த்தி செய்திறாத, முழுமையற்ற, மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றினை வைத்திருப்பது உசிதமாதாகும்.

8.2 மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையின் ஒவ்வொரு பதவிகளுக்கு ஒதுக்கியுள்ள குறியீடுகள் பின்வருமாறு

| | |
|---|---|
| சிவில் (தரம் III) | : 01– C |
| பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சியுடன்) | : 02 – C |
| பயிலுநர் தரம் (இரண்டு வருட கால பயிற்சியுடன்) | : 03 – C |

8.3 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரச / மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

8.4 தற்போது அரச/ மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

## 9. விண்ணப்பிக்கும் முறை

9.1 பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/- ஆகும்.

9.2 <u>**மத்திய மாகாணத்தினுள் வசிக்கும் விண்ணப்பதாரர்கள்** தமது பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் பின்வரும் நடைமுறையினைக் கையாள வேண்டும்.</u>

- அனைத்து விண்ணபதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அல்லது முன்னதாக மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிறப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும்.

- வேறு வருமான தலைப்பிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டை ஒட்டி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9.3 <u>**மத்திய மாகாணத்திற்கு வெளியே நிரந்தர பதிவினைக் கொண்ட விண்ணப்பதாரர்கள்** பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் பின்வரும் நடைமுறையினைக் கையாள வேண்டும்.</u>

- தமது பரீட்சைக் கட்டணத்தை நாட்டின் எப்பகுதியிலேனும் உள்ள மக்கள் வங்கிக் கிளையின் மூலமாக கண்டி மக்கள் வங்கியில் பேணப்படும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் இல. 003-1-001-0-0006004 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவுவைத்து கிடைக்கப்பெறும் வைப்புச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும்.

- வங்கி வைப்புச் சீட்டினை நிரப்பும் போது கணக்குரிமையாளரின் பெயரிற்கு "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு" எனக் குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, தொலைப்பேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் காரணம் என்பதற்கு "மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2025 / (சிவில்) பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2025" எனக் குறிப்பிட்டு வைப்புச்சீட்சை பூரணப்படுத்தி அனுப்புதல் கட்டாயமாகும்.

9.4 இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு **2026.01.09** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் தாம்

விண்ணப்பிக்கும் பதவி மற்றும் **வதிவு மாவட்டம்** என்பவற்றைக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை

10.1 இப்பரீட்சைக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம்.

10.2 பரீட்சார்த்தியொருவர் வேண்டுமென்றே பிழையான தகவலை சமர்ப்பித்துள்ளாரென அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்துள்ளாரென பின்னர் தெரியவருகையில், அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கனவனத்திற் கொள்ளப்படமாட்டாது, அத்துடன் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம் அல்லது அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள / வெளியிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

12. இந்நியமனப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், முதல் நியமனம் பெறும் சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் 05 வருட காலம் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். ஆனாலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் விசேடமானதொரு காரணத்துக்காக அக்காலம் முடிவடைவதற்கு முன்னராக அவ்வலுவலரை இடம் மாற்றுவதற்கு அவசியமானால் அதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

13. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் **www.psc.cp.gov.lk** எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை இங்கு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

14. சிங்களம், தமிழ் மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கை/இ: கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2025 டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244,
கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி